# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**ஆணை எண். 99/மாநகராட்சி/2018**

**நாள் : 12/07/2018**

**திரு க. மணிகண்டன்,**
**திருச்சி – 13.** – **முறையீட்டு மனுதாரர்**

**மாநகராட்சி ஆணையர் / உதவி ஆணையர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,**
**திருச்சிராப்பள்ளி .** – **எதிர் மனுதாரர்**

திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூர், கக்கன் காலனி, எண்.1 முகவரியில் வசிக்கும் திரு க. மணிகண்டன் அவர்களின் 03.05.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 99/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யபட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் பொன்மலைக்கோட்டம், உதவி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூர், கக்கன் காலனி, எண்.1 முகவரியில் வசிக்கும் திரு க. மணிகண்டன் என்பவர், தான் வசித்து வரும் வார்டு எண். 65–க்கு உட்பட்ட கருப்பையாபிள்ளை வீட்டுத் தெருவில் (Karuppiah pillai house lane) சாக்கடை வசதி, துப்புரவுப் பணி, சாலை வசதி மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து பொன்மலைக் கோட்ட உதவி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. மனுதாரர் சாலை மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரும் பகுதி மனுதாரரின் தந்தையார் திரு கருப்பையா பிள்ளை மற்றும் துரைச்சாமி ஆகியோருக்கிடையே தாவாவிற்கு உட்பட்டு, இது சம்பந்தமாக திருச்சிராப்பள்ளி முதன்மைக் கூடுதல் நீதிமன்றத்தில் 1061/1999 எண்ணிட்ட அசல் வழக்கு தாக்கலாகி உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதே இடம் சம்பந்தமாக IA No.707/2010 என்ற வழக்கும் திரு செல்வராஜ் மற்றும் திரு பாலசுப்ரமணியன் ஆகியோருக்கிடையே நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடிப்படை வசதி செய்து தரக்கோரும் தாவா சம்பந்தப்பட்ட நிலம் சம்பந்தமாக மாநகராட்சி வழக்குரைஞர் கீழ்க்காணும் கருத்தினை தெரிவித்துள்ளார்:-

"Admittedly a suit is pending in O.S.No.1061/1999 regarding the title of disputed land over which the road has to be laid. Hence, unless and until the suit is disposed on merits we cannot lay our hands in the disputed portion for the purpose of laying road. "

3. இம்முறைமன்ற நடுவத்தில் 05.07.2018 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு வருகை தந்து உரிய விளக்கம் அளிக்கக்கோரி முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால், அன்றைய நாளில் நடைபெறவிருந்த விசாரணைக்கு மனுதாரர் வருகை தரவில்லை. அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரும் சாலை சம்பந்தமாக மனுதாரரின் தந்தையாருக்கும் மற்றொரு நபருக்கும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 10 (3) (b)–இன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்ள இயலாது. எனவே, முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைக் குறித்து, நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி பொன்மலைக்கோட்ட உதவி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 12–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

24.7.18

25/7/18

பெறுநர்

1. திரு க. மணிகண்டன்,
   எண்.1, கக்கன் காலனி,
   திருவெறும்பூர்,
   திருச்சிராப்பள்ளி – 600 013.

2. உதவி ஆணையர்,
   பொன்மலை கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

3. மாநகராட்சி ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி